## கோவை அரசு மருத்துவமனையில்

# 2 வயது பெண் குழந்தைக்கு எச்ஐவி ரத்தம்

## தந்தை பரபரப்பு புகார்

**கோவை, பிப். 20:** கோவை அரசு மருத்துவமனையில் இரண்டுவயதுபெண்குழந்தைக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டதாககுழந்தையின் தந்தைபுகார்கூறியுள்ளார்.

திருச்சியை சேர்ந்தவர் விஸ்வநாதன்(28). இவரது மனைவி சித்ரா(25). இவர்களுக்குதிருச்சி அரசு மருத்துவமனையில்கடந்த 2017 மார்ச் 6ம் தேதி ஆண், பெண் என இரட்டைக் குழந்தைபிறந்தது. இதில், ஆண் குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. பெண் குழந்தை 700கிராம் மட்டுமே இருந்ததால் தீவிர சிகிச்சையளித்தனர். இதில், 32 நாட்களுக்குப் பின் குழந்தையின் எடை 1400கிராமாகஅதிகரித்தது. இதன் பிறகு குழந்தையை பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

இந்நிலையில், விஸ்வநாதன் தன்குடும்பத்துடன் திருப்பூருக்கு இடம் பெயர்ந்து விசைத்தறி கூடத்தில் பணிபுரிந்துவந்தார். பெண் குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் கடந்த 11.7.18அன்று திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு இருதய நோய் இருப்பதாக கூறி அன்றே கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். பிறகு, கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் இதயத்தில் ஓட்டை இருப்பதாகதெரிவித்துள்ளனர். 12ம் தேதி இரவு குழந்தைக்கு ரத்தம் ஏற்றினர். அப்போது,பாதியிலேயேரத்தம்ஏற்றுவதை நிறுத்திவிட்டு, ரத்தம்இருந்தபையை குப்பையில்போட்டனர் என தந்தை விஸ்வநாதன் குற்றம்சாட்டியுள்ளார். சிகிச்சைக்கு பின், குழந்தையை 13ம் தேதி டிஸ்சார்ஜ் செய்தனர்.



விஸ்வநாதன்

இந்நிலையில் கடந்த 8ம் தேதி அந்த குழந்தையின் உடலில் சிறு கட்டிகள் ஏற்பட்டதால் கோவை அரசு மருத்துவமனையில் மீண்டும் சிகிச்சைக்கு அனுமதித்தனர். குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள்,குழந்தைக்கு எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாம் என சந்தேகித்தனர். இதை தொடர்ந்து, குழந்தையின் ரத்தத்தை பரிசோதனை செய்தனர். அதில், குழந்தைக்கு எச்ஐவி பாதிப்புஇருப்பது தெரிந்தது. மேலும், குழந்தையின் தாய், தந்தை, மற்றொரு குழந்தைக்கும் எச்ஐவி டெஸ்ட் செய்தனர். அவர்களுக்கு எந்தவித பாதிப்பும்இல்லைஎன தெரிய வந்தது. இதனால், பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். எங்கள் இருவருக்கும் எச்.ஐ.விபாதிப்புஇல்லை. அப்படி இருக்கும்போது எங்கள்குழந்தைக்குஎப்படி எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டிருக்கும்? எனவே கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு ஏற்றப்பட்ட ரத்தத்தின் மூலம் தான் எச்ஐவி பரவியிருக்கும் என்று குற்றம்சாட்டினர். சமீபத்தில் சாத்தூரில் கர்ப்பிணிக்குஎச்ஐவிரத்தம்ஏற்றிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தற்போது கோவை அரசு மருத்துவமனையில் 2வயது குழந்தைக்குஎச்ஐவிரத்தம் ஏற்றப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து குழந்தையின் தந்தை விஸ்வநாதன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: குழந்தையின் இருதயத்தில் ஓட்டை உள்ளது. அதற்காக ரத்தம் ஏற்ற வேண்டும் என தெரிவித்தனர். நாங்கள், திருப்பூர், திருச்சி, கோவை அரசு மருத்துவமனையை தவிர வேறு எந்த மருத்துவமனையிலும்

4ம்பக்கம்பார்க்க